**மனன வசனம்**

**இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிற படியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! 2பேதுரு 3:11.**

**ஆராய்ச்சிக்கு**

**2பேதுரு 3:1,2;**

**யோவான் 21:15–17;**

**2பேதுரு 3:3–13;**

**சங்கீதம் 90:4;**

**மத்தேயு 24:43–51;**

**2பேதுரு 3:14–18.**

ஜூன் 10 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

# கர்த்தருடைய நாள்

தேவனை நம்பாதவர்களை நாம் நம்பமுடியாதென முற்காலத்தில் நினைத்தார்கள்; அப்படிப்பட்டவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள் என்றும் நினைத்தார்கள். ஏன்? பதில் மிகவும் எளிதானது. தேவனை நம்பாதவர்கள், தங்கள் செயல்களுக்கு நியாயத்தீர்ப்பில் கணக்கு கொடுக்கவேண்டும் என்று பயப்படமாட்டார்கள். அதனால், அவர்கள் தவறுசெய்யவும் பயப்படமாட்டார்கள். இன்றைய உலகப் பார்வையில் இந்தச் சிந்தனை தவறாக இருக்கலாம்; ஆனால், இந்த வாதம் சரியானதுதானே. இனிவரும் நியாயத்தீர்ப்புக்குப் பயந்து, அதற்காகச் சரியானதைச் செய்கிற நிலைமையில் அநேகர் இல்லை என்பதும் உண்மைதான். ஆனாலும், ஒருநாள் தேவனுக்குப் பதில்சொல்லவேண்டும் என்கிற நினைப்பு சரியான நடத்தைக்கு வழிநடத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

தீயவர்களுக்கு தேவனிடமிருந்து தண்டனை வரும் என்று வேதாகமம் நிச்சயமாகச் சொல்வதால், அதைக் குறித்து எச்சரிக்க பேதுரு பயப்படவில்லை. இந்தப் பின்னணியில், உலகத்தின் கடைசி நாட்களைக்குறித்தும், இரண்டாம் வருகையைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் பேதுரு குழப்பமின்றிப் பேசுகிறார். அப்போது, ‘பூதங்கள் வெந்து உருகிப்போம்’ என்கிறார். 2பேதுரு 3:10.

நாம் எல்லோரும் பாவிகள் என்பது பேதுருவுக்குத் தெரியும். அப்படிப்பட்டவை நிகழப்போவதால், ‘நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!’ என்று கேட்கிறார் 2பேதுரு 3:11.

2017, ஜூன் 17 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

சபைக்குள் வரவிருந்த ஆபத்தான உபதேசங்களைப்பற்றி தனது வாசகர் களை பேதுரு எச்சரிக்கிறார்.

சபையைத் தாக்கவிருந்தது இந்த ஒரு கள்ளப்போதகம் மட்டுமல்ல; மிக ஆபத்தான இன்னோர் உபதேசம் வரவிருந்தது. ஆனால், அதைக்குறித்துத் தெளி வாகப் பேசும்முன்னர் இன்னொரு செய்தியைச் சொல்லுகிறார்.

*பிரியமானவர்களே, இந்த இரண்டாம் நிருபத்தை இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன். பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன்சொல்லப்பட்ட வார்த்தை களையும், இரட்சகராயிருக்கிற கர்த்தருடைய அப்போஸ்தலராகிய எங்க ளுடைய கட்டளைகளையும் நீங்கள் நினைவுகூரும்படி இந்த நிருபங்களி னால் உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன். 2பேதுரு 3:1,2.*

***தான் சொல்வதற்கு வாசகர்கள் செவிகொடுக்கவேண்டுமென்று பேதுரு கூறுகிறார். எதற்காக? யோவான் 21:15-17ஐயும் பாருங்கள்.***

முன்பு பரிசுத்த தீர்க்கதரிசிகள்மூலம் தேவனுடைய வார்த்தை வந்ததாக 2பேதுரு 3:1,2இல் பேதுரு சொல்கிறார். பழைய ஏற்பாடாகிய வேதாகமத்திற்கு அவர்கள் கவனத்தைத் திருப்புகிறார். அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம் அவர்களிடம் இருப்பதை நினைவூட்டுகிறார். 2பேதுரு 1:19. வேதாகமத்தை அடிப் படையாகக்கொண்டே அவர்கள் நம்பிக்கை இருக்கவேண்டுமென்று அவர் விரும்பினார். பழைய ஏற்பாடு முக்கியமில்லை, அல்லது தேவையில்லை என்று புதிய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் பார்க்கமுடியாது. மாறாக, இயேசுவைப்பற்றி பேதுரு சொல்கிற கருத்துகளும் புதிய ஏற்பாடும் உண்மையென்று பழைய ஏற்பாடுதான் நிரூபிக்கிறது.

இன்னொன்றையும் கவனிக்கவேண்டும். பரிசுத்த தீர்க்கதரிசிகளிடமிருந்த அதிகாரம் இப்போது கர்த்தருடைய அப்போஸ்தலரிடம் வந்திருப்பதாக பேதுரு சொல்கிறார். கர்த்தர் தனக்குக் கொடுத்த அழைப்பை அவர் தெளிவாக உணர்ந்தி ருந்தார். அதனால்தான் அவர் அவ்வளவு உறுதியாகப் பேசுகிறார். தன்னுடைய செய்தி எங்கேயிருந்து வந்ததென்பது அவருக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தது.

நம் கலாச்சாரமோ, பகுத்தறிவோ, நியாயங்களோ அல்ல, வேதாகமம்மட்டுமே நம்முடைய வாழ்க்கையின்மேல் அதிகாரம் செலுத்தவேண்டும். அது ஏன்? நாம் ஏன் ஏழாம் நாளை ஓய்வுநாளாக ஆசரிக்கிறோம்? வேதாகமம் சொல்வதால்தானே?

பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன்சொல்லப்பட்ட வார்த்தைகளையும், இரட்சகராயிருக்கிற கர்த்தருடைய அப்போஸ்தலரின் கட்டளைகளையும் அவர்கள் நினைவுகூரும்படி இந்த நிருபங்களினால் அவர்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்பினபிறகு, தான் சொல்லவந்த எச்சரிப்பைச் சொல்லுகிறார். 2பேதுரு 3:2. இந்தக் கள்ளப்போதகம் மிகவும் ஆபத்தானது என்பதால், என்ன அதிகாரத்தின் அடிப்படையில் அவர் அதைச் சொல்கிறார் என்பதையும் அவர் வலியுறுத்துகிறார்.

***கிறிஸ்துவின் வருகையை சந்தேக்கிறவர்கள் என்ன வாதங்களை முன்வைப்பார்கள்? 2பேதுரு 3:3,4.***

---

பொய்யான சுயாதீனத்தை வாக்குப்பண்ணியவர்களுக்கும், இரண்டாம் வருகையைக்குறித்துப் பரியாசம்பண்ணுகிறவர்களுக்கும் முக்கியமான ஓர் ஒற்றுமை உள்ளது. முதல் கூட்டம் அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி நடந்தது. 2பேதுரு 2:10. இரண்டாவது கூட்டம் தங்கள் சுயஇச்சைகளின்படியே நடந்தது. 2பேதுரு 3:3. இரண்டு கள்ளப்போதகங்களுக்கும் அடிப்படை பாவ இச்சை என்பது தற்செயலாக நிகழ்ந்திருக்க வழியில்லை அல்லவா?

‘‘அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?’’ என்று பரியாசக்காரர் கேட்பார்களென்று பேதுரு சொல்கிறார். 2பேதுரு 3:4. இயேசு கிறிஸ்து இந்தப் பூமிக்குத் திரும்ப வருவாரென்ற வெகுகால நம்பிக்கைபற்றி அவர்கள் சந்தேகம் எழுப்புவார்கள். கடைசிக்காலத்தைப்பற்றி பேதுரு பேசுகிறார். ஏராளமான கிறிஸ்தவர்கள் மரித்துவிட்டார்கள்; மாற்றம் வேறு எதுவும் இல்லை. பரியாசக்காரர்கள் எழுப்புகிற கேள்வி நியாயமாகத்தானே தெரிகிறது.

‘நீதிமான்களும் அநீதிமான்களும் ஒரேவிதமாக மரித்து மண்ணுக்குள் சென்றார்கள். அதுவே அவர்கள் முடிவாக இருந்தது. இதை ஏனோக்கு கவனித்தார். அது அவருக்கு வேதனையாக இருந்தது.’ இவ்வாறு எலன் ஒய்ட் எழுதுகிறார். PP, p. 85. ஜலப்பிரளயத்துக்குமுன் வாழ்ந்த ஏனோக்கு இவ்விதமான கேள்விகளோடு போராடினாரென்றால், அதன்பிறகு கடைசிக்காலம் வரை உள்ள ஆயிரக்கணக்கான ஆண்டுகாலத்தில் வாழ்ந்தவர்களுக்கு ஏன் இந்தப் போராட்டம் இருக்காது?

செவந்த்-டே அட்வெண்ட்டிஸ்ட் விசுவாசிகளாகிய நம் நிலைமை என்ன? கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை நம் பெயரே வலியுறுத்துகிறது. ஆனாலும், அவர் இன்னமும் வரவில்லை. பரியாசக்காரர்கள் பரியாசம்பண்ணத்தான் செய்கிறார்கள். பேதுரு சொன்னதுபோலவே நடக்கிறது.

---

கிறிஸ்து இன்னமும் வரவில்லை என்றாலும், உங்கள் விசுவாசத்தை நீங்கள் எவ்வாறு பாதுகாத்துக் கொள்கிறீர்கள்? ஓய்வுநாள் வகுப்பில் உங்கள் பதில்களைக் கலந்துரையாடுங்கள்.

## ஆயிரம் வருடம் ஒரு நாள்

***பரியாசக்காரர்கள் கொண்டுவரவிருந்த வாதத்திற்கு பேதுரு எப்படிப் பதில் அளித்தார்? இயேசு கிறிஸ்து ஏன் இன்னமும் வரவில்லை என்பதை புரிந்துகொள்ள பேதுருவின் வார்த்தைகள் எவ்வாறு நமக்கு உதவுகின்றன? 2பேதுரு 3:8-10.***

உலகம் மாறாமல் அப்படியே இருக்கிறது எனும் கருத்தை பேதுரு முதலாவது மறுக்கிறார். தேவனுடைய வார்த்தையே தனது அதிகாரம் என்பதை உணர்ந்தவராக அவர் பேசுகிறதைக் கவனியுங்கள். சிருஷ்டிப்புக்குப் பிறகு உலகத்தில் மாற்றம் எற்பட்டிருக்கிறது என்பதற்கு வேதாகமத்திலிருந்து ஆதாரம் காட்டுகிறார். பூமியில் துன்மார்க்கம் பெருகியதால், அப்போதிருந்த உலகத்தை ஜலப்பிரளயத்தால் தேவன் அழித்துவிட்டார். 2பேதுரு 3:6. இப்போதிருக்கிற உலகம் தண்ணீரால் அல்ல, அக்கினியால் அழிக்கப்படும் என்கிறார். 2பேதுரு 3:10.

‘‘கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம்வருஷம்போலவும், ஆயிரம்வருஷம் ஒருநாள்போலவும் இருக்கிறது’’ என்கிறார் பேதுரு. 2பேதுரு 3:8. சங்கீதம் 90:4 இல் உள்ளதைத்தான் பேதுரு திரும்பச் சொல்லுகிறார். ‘‘உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம்போலவும் இருக்கிறது.’’ சங்கீதம் 90:4. நேரம்பற்றிய நமது பார்வைக்கும் தேவனுடைய பார்வைக்கும் வித்தியாசம் இருக்கிறது. எனவே, அதுபற்றி தீர்மானிப்பதில் நாம் எச்சரிப்புடன் நடந்துகொள்ளவேண்டும்.

மனிதரின் பார்வையில் இயேசுவின் வருகை தாமதிப்பதாகத் தெரிகிறது. ஆனால், தேவனுடைய பார்வையில் எந்தத் தாமதமும் இல்லை; தேவன் பொறுமையாக இருப்பதால், கூடுதல் நேரம் எடுத்துக்கொள்கிறார். திருந்தக்கூடியவர்கள் திருந்தவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். 2பேதுரு 3:9. திருந்தக்கூடியவர்கள் திருந்துவதற்கு வாய்ப்புகொடுப்பதற்காகவே, கூடுதல் நேரம் தேவைப்படுகிறது.

அப்படி இருந்தபோதிலும், தேவனுடைய பொறுமையைச் சாக்காக எடுத்துக் கொண்டு, இயேசுவை ஏற்றுக்கொள்வதைத் தள்ளிப்போடக்கூடாதென்று பேதுரு எச்சிரிக்கிறார். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும். திருடன் வரும்போது, பிறர் அறியாமல் வருவான். ஆனால், இயேசுவின் வருகை அப்படி இருக்கப்போவதில்லை.

தியானியுங்கள்: கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளுமெரிந்து அழிந்துபோம். 2பேதுரு 3:10. நாம் செய்யவேண்டியது என்ன? இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள். 2கொரிந்தியர் 6:2.

## அதனால் என்ன?

ஒரு வாலிபன் தன் அம்மாவிடம் இயேசுவைப்பற்றிப் பேசினான். இயேசுவின் மரணம்பற்றியும், இரண்டாம் வருகைபற்றியும் பேசினான். திறமையான ஒரு வேலை செய்துவிட்டதாக நினைத்துக்கொண்டான். இரண்டாம் வருகை பற்றிய அவனுடைய குட்டிப் பிரசங்கம் முடிந்தவுடன், அவன் அம்மா அவனிடம், ''அதனால் என்ன? அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்டாராம்.

***2பேதுரு 3:11-13இல் இந்த கேள்விக்கு பேதுரு என்ன பதில் சொன்னார்? மத்தேயு 24:43-51.***

---

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைபற்றிய நம் நம்பிக்கை என்ன என்பதை செவந்-டே அட்வெண்ட்டிஸ்ட் எனும் நமது பெயரே காட்டுகிறது. இந்த உபதேசம் நமக்கு அடிப்படையானது. கிறிஸ்து மீண்டும் வராவிட்டால், நம் கிறிஸ்தவ விசுவாசம் அர்த்தமற்றதாகிவிடும்.

***மத்தேயு 24:43-51 இல் வரும் பொல்லாத வேலைக்காரனைப் போல நாம் மாறிவிட வாய்ப்பு உள்ளதா?***

உவமையில் வரும் அதே பொல்லாப்பைச் செய்கிறவர்களாக நாம் இல்லாமல் இருக்கலாம். அது பிரச்சனை இல்லை. நம்முடைய தரத்தைத் தாழ்த்திவிட வாய்ப்பு இருக்கிறது என்பதுதான் பிரச்சனை. மற்றவர்களை நடத்தும்விதத்தில் நாம் தாழ்ந்துவிடலாம்; உலகத்தாரைப்போல நாம் மாறிவிடலாம்; கிறிஸ்துவின் வருகையைப்பற்றிய அக்கறை இல்லாமல் போகலாம்.

விளக்கப்படங்களையும் தீர்க்கதரிசனக் கணக்குகளையும் எடுத்துக்கொண்டு, கிறிஸ்து எப்போது வருவாரென்பது எனக்குத் தெரியும் என்று சொல்கிறவர்கள் அவ்வப்போது வந்துகொண்டுதான் இருக்கிறார்கள். கிறிஸ்துவின் வருகைக்கு நாள்குறிப்பதைவிட பெரிய ஆபத்து இன்று செவந்-டே அட்வெண்ட்டிஸ்ட் விசுவாசிகளைக் கெடுத்துக்கொண்டிருக்கிறது. கிறிஸ்துவின் வருகைபற்றிய சிந்தை நம் மனதில் குறைந்துகொண்டே வருவதுதான் பெரிய ஆபத்து.

நாட்கள் செல்லச்செல்ல, கிறிஸ்துவின் வருகை சமீபித்துக்கொண்டே இருக்கிறது. அதேசமயம், நாட்கள் செல்லச்செல்ல, கிறிஸ்துவின் வருகை தாமதிப்பதால், அது நம் வாழ்க்கையைப் பாதிக்கப்போவதில்லை எனும் எண்ணம் வலுப்பெறவும் வாய்ப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட மந்த நிலை ஏற்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாக வேதாகமம் எச்சரிக்கிறது. ''இயேசுகிறிஸ்து வரும்போது, நாம் நியாயத்தீர்ப்பைச் சந்திக்கவேண்டியிருப்பதால், நாம் பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்'' என்கிறார் பேதுரு. 2பேதுரு 3:11. இரண்டாம் வருகை எப்போது வேண்டுமானாலும் நடந்துவிட்டுப் போகட்டும்; அதன் நிஜம் இன்று நம் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும்.

இரண்டாம் வருகையின் நிஜம் உங்கள் சிந்தையிலும் செயலிலும் என்ன மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது? உங்களுடைய விசுவாசத்தைப்பற்றி உங்கள் பதில் என்ன சொல்லுகிறது?

## கடைசி அழைப்பு

துவக்கத்திலிருந்தே அவர் சொல்லிவருகிற ஒரு கருத்தோடு பேதுரு தமது நிருபத்தை முடிக்கிறார். அது ‘ அக்கிரமக்காரருடைய வஞ்சகம்’. *2பேதுரு 3:17.*

***பேதுரு யாருடைய எழுத்துகளைக் கவனிக்குமாறு வேண்டுகிறார்? இதில் பேதுரு எதைக்குறித்து எச்சரிக்கிறார்? 2பேதுரு 3:14-18.***

---

---

---

பிரியமான சகோதரனாகிய பவுலின் நிருபங்களைக் கவனிக்குமாறு கேட்டுக் கொண்டு, பேதுரு தனது நிருபத்தை முடிப்பது எவ்வளவு சுவாரசியமாக இருக்கிறது! 2பேதுரு 3:15. இரண்டாம் வருகைக்காகக் காத்திருக்கும் வேளையில் நாம் ஒருவரோடு ஒருவர் சமாதானமாக வாழ்ந்து, கிடைக்கும் நேரத்தில் நம் வாழ்க்கையைப் பரிசுத்தமாக்க வேண்டுமென்று பவுலும் எழுதியிருக்கிறார். ரோமர் 2:4; ரோமர் 12:18; பிலிப்பியர் 2:12.

கிறிஸ்தவ வரலாற்றின் ஆரம்பக் கட்டத்திலேயே, பவுலின் எழுத்துகளுக்கு மிகுந்த மதிப்பு இருந்தது. இதை பேதுருவின் நிருபம் நிரூபிக்கிறது. பேதுரு புதிய ஏற்பாட்டிலுள்ள பவுலின் எல்லா நிருபங்களையும்பற்றிப் பேசுகிறாரா, அல்லது ஒரு சில நிருபங்களைப்பற்றிமட்டும் பேசுகிறாரா என்று தெரியவில்லை. எப்படி இருந்தாலும், பவுலின் எழுத்துகளை பேதுரு மிகவும் மதித்தாரென்பது தெரிகிறது.

“கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக பவுலின் நிருபங்களையும் புரட்டுகிறார்கள்” என்கிறார் பேதுரு. ‘மற்ற வேதவாக்கியங்களைப்போல பவுலின் நிருபங்கள்’ என்று பேதுரு சொல்வதால், எபிரெய வேதாகமத்திற்கு இருந்த அதிகாரத்தை உடையவையாக பவுலின் நிருபங்கள் இருந்ததாகத் தெரிகிறது.

சுயாதீனத்தைப்பற்றி கள்ளப்போதகர்கள் தவறாகப் பேசினதாக பேதுரு எழுதியிருக்கிறாரல்லவா? விசுவாசத்தால்மட்டுமே நீதி என்று பவுல் வலியுறுத்தியதைத் தவறாகப் புரிந்துகொண்டு, தங்கள் பாவவாழ்க்கைக்குச் சாக்குப்போக்காக, விடுதலை-கிருபைபற்றிய பவுலின் எழுத்துகளைப் பயன்படுத்தியிருப்பார்களென்று தெரிகிறது. ரோமர் 3:21, 22. ஆனால், பாவம்செய்வதற்கு பவுலின் எழுத்துகள் எந்த உரிமமும் தரவில்லை. ரோமர் 6:1-14. விசுவாசத்தால் நீதிபற்றி அதிகம் பேசின பவுலும் இந்தத் தவறுகுறித்துப் பேசவேண்டியிருந்தது. தங்களுக்கே கேடு வரத்தக்கதாக பவுலின் எழுத்துகளை அநேகர் புரட்டுகிறார்கள் என்று பேதுரு கூறுகிறார். 2பேதுரு 3:16.

கிறிஸ்து இயேசுவில் நாம் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்? நாம் இப்போது செய்கிற எப்படிப்பட்ட தெரிவுகள் அதற்கு உதவிசெய்யமுடியும்?

---

இரண்டாம் வருகை மிகவும் தாமதிப்பதுபோல, நம் பார்வைக்குத் தெரியலாம். அப்படி நாம் நினைப்போம் என்பது இயேசுவுக்கும் தெரியும். இந்தச் சமயத்தில் நாம் எச்சரிக்கையாகவும் கவனமாகவும் இருக்கவேண்டுமென்று இயேசு எச்சரித்திருக்கிறார். உதாரணமாக, இரண்டு வேலைக்காரர்களைப்பற்றிய உவமையை எடுத்துக்கொள்ளுங்கள். மத்தேயு 24:45–51. தங்கள் எஜமானின் வருகையை இருவருமே எதிர்பார்த்தார்கள். ஆனால், அவர்கள் செய்த தீர்மானங்கள் வித்தியாசமானவை. தன் எஜமானின் வருகைக்காக ஒருவன் எப்போதும் ஆயத்தமாக இருந்தான். தன் எஜமான் வரத்தாமதிப்பதைப்பார்த்த அடுத்தவன் பொல்லாதவனாக மாறினான். "அவர் வருகிற நேரம் துல்லியமாகத் தெரியாததால், நாம் விழிப்போடு இருக்கவேண்டுமென்று இயேசு சொல்லியிருக்கிறார். 'எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள்.' லூக்கா 12:37. கர்த்தருடைய வருகைக்காகக் காத்திருக்கிறவர்கள் வெறுமனே ஒன்றும் செய்யாமல் எதிர்பார்த்திருப்பதில்லை. கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்க்கிறவர்கள் கர்த்தருக்குப் பயப்படுவார்கள்; மீறுதலால் வரும் தீர்ப்புக்குப் பயப்படுவார்கள்; அவருடைய கிருபையைப் புறக்கணிப்பது பெரிய பாவம் என்று உணருவார்கள். சத்தியத்துக்குக் கீழ்ப்படிந்து, தங்களைச் சுத்திகரித்துக்கொள்வார்கள்." –*DA, 634.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *திங்கட்கிழமை பார்த்த இரண்டாம் வருகைபற்றிய கேள்விக்கான பதிலைத் தியானியுங்கள். கிறிஸ்து இன்னமும் வரவில்லை எனிபதை எவ்வாறு பார்க்கிறீர்கள்?*
2. *கலாச்சாரம், பாரம்பரியம், பகுத்தறிவு போன்றவற்றைச் சாராமல் தேவனுடைய வார்த்தையைமட்டும் சார்ந்திருக்கிற எஸ். டி. ஏ. உபதேசங்கள் யாவை?*
3. *பாவ இச்சைகளையும் கள்ள உபதேசங்களையும் பேதுரு தொடர்புபடுத்துகிறாரென்று பார்த்தோம். 'இரண்டு கள்ளப்போதகங்களுக்கும் அடிப்படை பாவ இச்சை என்பது தற்செயலாக நிகழ்ந்திருக்க வழியில்லை' என்றும் பார்த்தோம். இரண்டுக்குமிடையே என்ன தொடர்புகள் இருக்கலாம்?*
4. *காலம் என்பது பிறவற்றைச் சார்ந்தது என்று ஆல்பட் ஐன்ஸ்டீன் கண்டுபிடித்தார். நீங்கள் எங்கே இருக்கிறீர்கள், எவ்வளவு வேகமாக நகர்ந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதைச் சார்ந்தே காலத்தைக் கணக்கிடமுடியுமாம். அதாவது, காலம் என்பது எளிதில் புரிந்துகொள்ள முடியாதது. நம்முடைய காலமும் தேவனுடைய காலமும் வித்தியாசமானவை என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா? கிறிஸ்துவின் வருகையில் தாமதம் என்பதை விளங்கிக்கொள்ள முடியுமா?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.